www.padippakam.com

# அருவி!

செப்டம்பர் - அக்டோபர் 96



உலகினைப் புரட்டிப்போர்
புதுவாழ்வு படைத்திட
எழுதுகோல் இங்கோர்
நெம்புகோல் ஆகட்டும்!

மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL ASSOCIATION OF TAMIL RESEARCH, MALAYSIA

மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைக் கருத்தரங்கு

## "புது நோக்கில் புதுக்கவிதைகள்"

தேதி : 15-9-1996
நாள் : ஞாயிற்றுக்கிழமை
இடம் : ஒன்பதாவது தங்கும் விடுதி,
மலாயாப் பல்கலைக்கழகம்
நேரம் : காலை மணி 8.00 - மாலை மணி 5.00

படிப்பகம்

## நம்பிக்கைகள்!

ந. பச்சைபாலன்

எழுதுகோல் ஏந்தும்
எழுத்து வேந்தர்களே!

சமுதாயத்தில் இருந்து
தங்களையே
நாடு கடத்திக்கொண்ட
நல்லவர்களே!

எழுதுகோல்களால்
உங்கள் பெயர்களையே
எழுதிப் பார்த்தது போதும்!

எதார்த்தம் தேடி
எத்தனையோ கிலோ மீட்டர்
பயணித்ததும் போதும்!

காதலே கருவென்று
கதையளந்ததும் போதும்!

உண்டபின் கொரிக்கும்
நொறுக்குத் தீனிகளாய்
எழுத்து மருந்துகளை
மலிவாக்கியதும் போதும்!

இனியாகிலும்
தளர்ந்து கிடக்கும்
உள்ளங்களைத்
தட்டிக் கொடுக்கவும்

அழுது புலம்பும்
அன்பர்களை அரவணைக்கவும்

வசந்தத்தைத்
தொலைத்து விட்டதாய்
எண்ணி அதன்
முகவரி தேடுபவர்க்குத்
திசை காட்டவும்

வறுமை பூத்துக்கிடக்கும்
மனத்தின் பரப்பெங்கும்
எழுச்சி நீர் பாய்ச்சவும்

தோல்விப் புதைமணலில்
புதைந்து போனவர்களைத்
தோண்டி எடுத்து மீண்டும்
வாழ்விக்கவும்

எழுதுகோல் ஏந்தும்
எழுத்து வேந்தர்களே!

உங்கள் எழுதுகோல்களில்
சொட்டு சொட்டாய்
அரும்பட்டும்

நம்பிக்கைகள்

www.padippakam.com

# அருவி

(கவிதை_இரு திங்களிதழ்)

செப்டம்பர் அக்டோபர் 96

ஆசிரியர் குழு :

சீ.அருண்
கணபதி கணேசன்
வே.சுந்தரராசு
ஏ.தேவராசன்

மரபுக்கவிதை பொறுப்பு :

பாநெறிப்பாவலர் டாக்டர் டி.வி.ஆர்.பி

தொடர்புக்கு :

அருவி
**424 TAMAN SRI MAHSAN**
**72100 BAHAU**
**NEGERI SEMBILAN**
**MALAYSIA.**

நன்கொடை ம.ரி. 1.50

படிப்பகம்

www.padippakam.com

அருவி வாழ்த்துகிறது !

மலாயா பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 19.09.96 – இல் புதுக்கவிதைக் கருத்தரங்கை தேசிய அளவில் நடத்தியது.

புதுக்கவிதைக்குப் புத்தூக்கம் பிறந்துள்ளது. இதுவரை மலேசிய நாட்டில் புதுக்கவிதையின் ஆற்றலும் செயற்பாடுகள் யாதென்று தெரியப்படாமலேயே இருந்து வந்தது.

புதுக்கவிதையின் வெற்றி தோல்விகளை ஆய்வு செய்யும் களம் இல்லாமலிருந்தது. இந்தக் கருத்தரங்கு வழி மலேசியப் புதுக்கவிதைகள் ஒரு மீள்பார்வைச் சட்டகத்தில் மாட்டிப் படம் போடப் பட்டுள்ளது.

இது இலக்கிய வளர்ச்சிக்கான திருப்புமுனை. எப்படி – எதை எழுதினாலும் அது புதுக்கவிதையாகிவிடும் என்ற கருத்து நசுக்கப்பட்டது. இனி புதுக்கவிதைப் படைப்பாளர்கள் தங்களைத் தாங்களே நிறுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவர்களின் படைப்புகள் விமர்சனப் பாறைகளால் மோதப்படும்.

கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஐந்து கவிதைகளை இந்த இதழில் அச்சேற்றியுள்ளோம். கவிஞர் பெரு மக்களுக்கும், பல்கலைக் கழக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தாருக்கும் எங்களது நன்றி கலந்த வாழ்த்துகள்.

அன்புடன்

ஆசிரியர் குழுவினர்

படிப்பகம்

www.padippakam.com

# மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதைக் கருத்தரங்கு

## "புது நோக்கில் புதுக்கவிதைகள்"

ஒன்பதாவது தங்கும் விடுதி
மலாயாப் பல்கலைக்கழகம்
15 செப்டம்பர் 1996

ஏற்பாடு:

மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர்

படிப்பகம்

www.padippakam.com

# அவமானப் பிரஜைகள்

மு. மணிக்குமார்
பிடோர்

அடுக்குங்கள்
கற்களை அடுக்குங்கள்......
வருமுன் காக்கும்
வைர வார்த்தையினை
இந்த ஒரு விஷயத்திலாவது
செவ்வன செய்வோம்

காய்ந்து போன கனவுகளோடு
அதோ !
வளைந்து கிடக்கும்
அந்த கேள்விக் குறிகளாய்
எங்கள் சமூகம்
கேள்வித்தீயில் வெந்து வாடுகிறது.

நிமிர்த்த வந்தவர்கள்
நிலையை மாற்றிக் கொண்டார்கள்
குட்டுவதற்கு இலகுவாக
குனிந்து கிடப்பதால்
குட்டுகிற சுகத்தை
கூட்டிக் கொண்டார்கள்.

அடுக்குங்கள்
கற்களை அடுக்குங்கள்
வருமுன் காக்கும்
வைர வார்த்தையினை
இந்த ஒரு விஷயத்திலாவது
செவ்வன செய்வோம் !

அவமானங்களின்
முழுப் பிரஜைகளாக
நாங்கள் ஆகிக் கொண்டிருக்கிறோம்...... !

முன்னேற்ற பாதையில்
எங்கள் கொடிகள் அதிகப்படி
படரவிடாதபடி
கட்டுப்பாடு கத்தரிகள்........

கல்லூரி வாழ்க்கையில்
எங்கள் தன்மானங்கள் மீது
கல்லெறியப்பட்டு கல்லெறியப்பட்டு
ஆறாத காயங்கள்
கவிழ்க் கிடக்கும் மனதுகளங்கள்........

எங்கள் வருகையால்
வெளிச்ச இடங்களெல்லாம்
கறுப்பாகிவிட்டதாக
விஷயத்தைக் கக்கும் வசனங்கள்
இதயத்தை அறையும் விஷமங்கள்........

மன அதிர்ப்புகளுக்கு
இதமாக உரசி
தோளுக்குச் சுகங்கொடுக்க
எங்கள் பள்ளிச் சுவர்கள்......
குட்டிச் சுவருக்கும் கீழாய்
முட்டிமுடைந்து கிடக்கும்
எங்கள் உரிமைகள்........

ஐயகோ!
அவமானங்களின்
முழுபிரஜைகளாக
நாங்கள் ஆகிக் கொண்டிருக்கிறோம்

சுதந்திரக் காற்று
எங்கள் பக்கமும் வீசுவதாக
வியாக்கியானம் சொன்னபோது
விரைந்து சென்று நோக்கினேன்.
ஆமாம் ! ஆமாம் !
பரவசமாக எம் தோழர்கள்
பட்டம் விட்டுக்கொண்டிருந்தார்கள்
குடைகளுக்குள்ளே !

விசாரித்தபோது விஷயம் தெரிந்தது.
எங்கள் மேய்ப்பாளர்கள்
வானத்தை வாடகைக்கு
எடுத்துக் கொண்டார்களாம்.

ஐயோ.....வேதனை ! வேதனை !
யார் காதிலாவது
விழுந்து விடப் போகிறது
விழித்துக் கொள்ளப் போகிறார்கள்.....!

படிப்பகம்

www.padippakam.com

என்ன சொல்லி என்ன?
கண்ணுக்குள் கண்ணீரும்
நெஞ்சுக்குள் செந்நீரும்
இருக்கும் வரை
எங்களை நாங்களே
தேற்றிக் கொள்கிறோம்.

என்றாவது ஒரு நாள்,
எங்கேயாவது ஓரிடத்தில்,
ஏதாவது ஒரு விடிவெள்ளி
கதறித் துடித்துக் கக்கும்
கண்ணீர் வெப்பம்

எழுச்சி முட்டைகளை
வெடிக்கச் செய்யும்
புரட்சிக் குஞ்சுகளை
பொரிக்கச் செய்யும் !

அதுவரை-
அடுக்குங்கள்
கற்களை அடுக்குங்கள்
தமிழனின் சமாதியாவது
சரியாக செய்யப்படட்டும் !

வருமுன் காக்கும்
வைர வார்த்தையினை
இந்த ஒரு விஷயத்திலாவது
செவ்வனே செய்வோம் !

அடுக்குங்கள்
கற்களை அடுக்குங்கள்
அழுகை வந்தாலும் அடக்கிக் கொண்டு
அடுக்கிக்கொண்டே இருங்கள் !

படிப்பகம்

www.padippakam.com

# விடியல் தேடும் இதயம்!

பஞ்சார் எ. அண்ணாமலை

அரியணையில்
அமர்ந்தவனைப் போல்
ஆகாய வீதியை
அண்ணாந்து பார்த்திருந்தேன்!

இது வரைக்கும்
நம்மை
இருட்டுக்குள்
இருக்க வைத்தது
எது ! சமூகமா!

இல்லை! இல்லை!
— உன்
துரு பிடித்த
எண்ணம் தான்!
என
என்னையே
தோண்டித் தோண்டி
விசாரித்த போது

என்னில்
நடைபெறும்
குரு க்ஷேத்திரத்தில்
நான்
கட்சி மாறிக்கொண்டிருந்தேன்!

அமர்ந்திருந்த நாற்காலிக்கு
சின்னச் சின்ன
சிறகு முளைத்தது

பனிதெளித்துப்
பூக்கள் விழிப்பது போல்
நல் எண்ணங்கள் விழித்தன!

பாட்டோடு வரும்
பாவலரே
ஏட்டோடு அமர்ந்திருக்கும்
மாணவரே!
தீமைகளைப் பொசுக்கும்
தீப்பந்தமென உங்கள்
இதயத்தை வணங்குகின்றேன்!

இனி
வருத்தத்தை

வழிந்தெறியுங்கள்!

கண்ணீரில்
நனைவதை விடவும்
வியர்வையில் கரைவதே விவேகம்!

சுந்தரியைக்
கனவுகளில்
சுமந்து சுமந்து
ராத்திரிக்கு
விளக்குகளைத் தேடும்
வேடிக்கை மனிதராகி
விடாதீர்கள்!

நெஞ்சுக்குள்ளே
வெறும் கனவுகளையே
நிரப்பி விடாதீர்கள்
பிறகு
உங்கள்
சிறகுகள் சிரங்கு பிடித்து
சிறுத்துப் போகும்
பிறகு
வாழ்க்கை
உனக்கு நீட்டுவதெல்லாம்
கந்தல் துணிதான்!

இந்த மண்ணிலும்
வெள்ளித் திரைவானில்
விழிகளை வைத்தவர்கள்
விலகிப் போகட்டும்!
நமக்குக் குறுக்கே இனி
எந்தத் திரையும்
வேண்டாம்! மனிதர்களே!

ஒரு முடிவுக்கு
வாருங்கள்
வெளிச்சங்கள்
திசைகளைத் தொடும் முன்
வானம் கூட
சிவந்து போகிறது
ஒரு சமூக விடியல்
புலர்வதற்கு
உழைப்பினை
உள்ளத்தில்
விதையுங்கள்!

இனியாவது
உரசிப்பார்த்தால்
தீ குச்சிகள் என
பிறருக்கு விளங்க
வையுங்கள்!

உங்கள்
இதயத்தில்
முற்றுகை இட்டிருக்கும்
வருத்தத்தை வழித்தெறியுங்கள்!

அதோ பார்
கீழ் வானில்
மனதீ(ர்)
வெளிச்சத்தின் கீற்றுகள்!

படிப்பகம்

# தூண்டுகோல் தேடும் சுடர் விளக்குகள்!

www.padippakam.com

வே. இராஜேஸ்வரி

ராமன் இருக்குமிடமே
அயோத்தி என்று
எங்கள்
சீதாப் பாட்டிகள்
ராமசாமி தாத்தாக்களுடன்
கப்பலேறி
தோற்று வித்த
புது இனத்தின்
புதிய வாரிசுகள் நாங்கள்!

உழைப்பு
உணவு
உறக்கம்
என்ற முக்கோணத்தில்
முடிந்து போனது
எங்கள்
முன்னோர்களின் வாழ்க்கை!

ஆனால்
நாங்கள் மாறியுள்ளோம்!
கருக்கலிலே
நெற்றியில்
சுடர் விளக்குடன்
சூரியனையே எழுப்பிவிட்டு....
கங்காணிக்கும் கருநாகத்துக்கும்
பயந்து
ஓடி ஓடி மரஞ்சீவி
முதுகு முறிய பால்வாளிச் சுமந்த
எங்கள் தினக் கூலி அம்மாக்களிலிருந்து
மாறியுள்ளோம்!

நாங்கள்;
மாதச் சம்பளத்துக்கு
உட்கார்ந்து வேலை செய்ய
சீலோன் சென்று வருகிறோம்,
அலுங்காமல்
அவன் அனுப்பும் பஸ்சிலேயே....!

ரோஜா வேண்டுமானால்
முள் குத்தலுக்கும்
தயாராக வேண்டுமே.....
விளைவு
பண்பாட்டில் பாதிப்பும்
கலாச்சாரத்தில் கால் வாசியும்
காணாமல் போனது!
ஆனால்
கழுத்துக்கு மேல்
நாங்கள்
எப்போதும் தமிழச்சிகளே.......!

குனிந்து நடந்த நாங்கள்
நிமிர்ந்த போது
எதிரே பாதை
வளைந்து நெளிந்து, நீண்டு....... கிடந்தது
ஒவ்வொரு வளைவிலும்
உடன் வருபவர்கள்
குடும்பம் குட்டி என்று
ஆங்காங்கே
நின்று நிலைத்து விட்டனர்

தோட்டம்
"லயம்"
"கிளார்க்"
என்ற வட்டத்துக்குள்
களைத்துப்போன
எங்களைப் பார்த்து
"உமது ராஜ்ஜியம் உமக்கே"
என்று சபித்து விட்டுப் போனது
கல்வி தேவதை!

இருப்பினும்
எங்கள் கால் விலங்குகளைக்
கழற்றும் சாவி
எங்கள் கைகளிலே இருந்தும்
அறியாத பேதையாயிருந்தோம்!

அறிவுறுத்தும்
ஞானியரும் எங்களிடம்
இல்லை
இருப்போரிலும் ஞானி யார்
என்பதே போர்!

நாங்கள்
தூண்டு கோல் தேடும்
சுடர் விளக்குகள்!

பெரும் பசியோடு
காத்திருக்கும் எங்களுக்கு வெறும் தேநீர் கொடுத்து
சமாளிக்காதீர்கள்!

அரசியல் வானில்
எம்பி எம்பிக் குதித்ததில்
எட்டியது
ஒரு எம். பி தான்!

வாமனன்
குரு க்ஷேத்திரக் கண்ணனாகும் வரை!

படிப்பகம்

www.padippakam.com

ற்புள்ளி, அரைப்புள்ளி;
வைத்துக் காத்திருந்தால்
முற்றுப்புள்ளியே வந்து
முன் நிற்குமே

புதிய தலைமுறையாய்
பொது வானில்
கொஞ்சம் பறக்க வந்தால்
வீட்டினரே
கற்பெனும் கல் வீசி
பச்சைக்கிளிகள்
எங்களைச் சிறகொடிக்கின்றனர்
கல்லடிக்குத் தப்பியோர்
காரணம் கண்டனர்
கழுகுகள் அங்கே
புறாவேடம் போட்டு
உலா வருகின்றனவாம்.....!

நாங்கள்
பாறையிலும்
வேர்விட்டு
முளைத்து விடுவோம்;
அக்கினிப் பரீட்சைக்கு
எங்களை ஆளாக்காதிருந்தால்!

ஆணுக்குப் பெண்ணிங்கே
இளைப்பில்லை தான்
ஆனால்
ஆணினமே
எங்கள்
ஆணி வேர்களானால்
நாங்கள்
விண் முட்ட
உயர்ந்து வளர்வோமே.......!

* கிலாங்கு – தொழிற்சாலை

படிப்பகம்

www.padippakam.com

# மலைநாட்டில் தமிழுணர்வு

ந. பச்சைபாலன்

மலைநாட்டில் தமிழுணர்வை
நிறுத்துப் பாரென
மதிப்புமிகு அவைத்தலைவர்
எனைப் பணித்தார்.

நிறுத்துப் பார்த்தேன்
பொறுத்தும் பார்த்தேன்
வருத்தும் எண்ணம்
என்னை வதைத்தெடுக்க
கனத்த இதயத்தோடு
இங்கே
கவிபாட வருகிறேன்.

பொய்யான புரியாத
புழுங்கதைகள் புனைவதிலே
எனக்குப் பிரியமில்லை
எனவே-
கண்டு உணர்ந்ததை
காதுவரை வந்ததை
காட்சிக்காக இங்கே
கடை விரிக்கிறேன்.

அவையோரே நீங்கள்
கொள்வீர்கள் என்ற
குறிப்புணர்ந்தேன்.

*காட்சி 1*

அன்றொருநாள்-
கவிபொருவர் என்னைத் தேடி
இல்லம் வந்தார்

கன்னித் தமிழைக்
காணலையே காணலையே
எனப் புலம்பி
கண்கள் கலங்கினார்

அதிர்ச்சிச் சிறுவையில்
அறையப்பட்டேன்
ஈதென்ன அநியாயம்!
ஆளைத்தான் கடத்துவார்கள்
தமிழையுமா கடத்துவார்கள்?
கன்னித்தமிழ் என்பதால்
கடத்தினாரோ?

வினா தொடுத்தேன்
விளம்பினார் இப்படி -

" அடுக்குமா தம்பி
இந்த அநியாயம்?
மிடுக்கோடு வாழ்ந்த தமிழ்
இன்று
துடுக்கிழந்த படகாக
ஆகலாமா?

தமிழர்களின் கோயில்களில்
பிறந்தநாள் விழாக்களில்
திருமணங்களில்
அருந்தமிழ் காணாமல் போன
அவலத்தை என்னென்பேன்!
எப்படிப் பொறுப்பேன்?"

இதயத்தின்
மூலை முடுக்கெல்லாம்
அவரின் புலம்பல்
ஈட்டிகளாய்ப் பாய்ந்து
இம்சித்தது.

*காட்சி 2*

இன்னொரு நாள் -
இளந்தென்றல் வீசும்
இதமான மாலை

ஓய்வாக நான் வீட்டில்
இருந்த வேளை

"பேரு வாங்கலையோ பேரு
பேரு வாங்கலையோ பேரு"
வேடிக்கைக் குரல்கேட்டு
வாசலுக்கு விரைந்தேன்

"எடுங்க தம்பி
நல்ல தமிழ்ப் பேரு
ஏராளமுண்டு!
எது இரண்டு எடுத்தாலும்
ஒரு ரிங்கிட்
ஒரு பேரு இலவசம்!"

வாயடைத்துப் போனேன்
இந்த அநியாயத்தைக் கேட்க
இங்கே யாருமில்லையா?
நல்ல தமிழ்ப்பேருக்குமா
பஞ்சம்?

படிப்பகம்

www.padippakam.com

வினாக்களால் சுட்டெரித்தேன்
பல்லிளிப்பமாய்ச் சிரித்தபடி
பதிலளித்தான் அவன்

"நல்ல தமிழ்ப் பேரெல்லாம்
நலிஞ்சுபோச்சு தம்பி
தஸ்சும் புஸ்சும் பேருன்னு
ஆகிப்போச்சு தம்பி
பேரு போனா அடையாளம்
போயிடுமே என்பதாலே
வேகாத வெயிலுலே
பேரு விக்கிறேன் தம்பி!".
என் நாடி நரம்பெல்லாம்
ஒடுங்கியது!
தாயீன்ற குழந்தைக்குத்
தமிழ்ப் பெயரை வைக்காமல்
தடுமாறும் தமிழர்க்கு
அவன் பாடலே
பாடமாகிக் கொண்டிருந்தது!

*காட்சி 3*

பல்கலைக்கழகம் தன்னில்
பயிலும் நண்பரைப் பார்த்தேன்

"ஆண்டு இறுதியாச்சே
ஆய்வுக்கு என்ன செய்கிறீர்?"

"மலைநாட்டில்
மரித்துப்போகும் தமிழ் இதழ்கள்"

"மனியான தலைப்பு
ஆயினும்
மன்னிக்க வேண்டுகிறேன்
அற்ப ஆயுளில் போன
ஐயிரண்டு இதழ்களை வைத்து
ஆய்வைச் செய்யமுடியுமா?"

"புரியாமல் பேசுகிறீர்!
தங்கத் தமிழரால்
கழுத்து நெறிக்கப்பட்டு
புதை குழிக்கு அனுப்பப்பட்ட
தமிழ் இதழ்கள் -

தோண்டத் தோண்ட
வருகின்றன
நூற்றுக்கும் குறையாமல்!
மேலும் -
உயிரோடு இருந்தும்
உடல் நலிந்து உலவுகின்ற
தமிழ் இதழ்கள் பற்றியும்
ஆய்வில்
தாளிக்கப் போகிறேன்
வரட்டுமா?"

நண்பர் புறப்பட்டார்
சோகப் புயலொன்று
புறப்பட்டு எனக்குள்
சுற்றுலா நடத்தியது!

*காட்சி 4*

தமிழ்க்கல்வி பற்றிய
சூடான கருத்தரங்கம்
கலந்து கொள்கிறேன்

அடுக்கு மொழியில்
ஆரவாரித்த தலைவரின்
பேச்சலை ஓய்ந்தவுடன்
கேள்விக் கணையால்
வழிமறித்தேன்.

"தமிழ் தமிழென்று
துடிக்கிறீரே உங்கள்
பிள்ளைகள் எங்கே
தமிழ்ப்பள்ளியிலா?"

சிரித்துக்கொண்டே தலைவர்
தத்துவம் சிந்தினார்

"நாங்கள் சாமானியர்கள்
கம்பனின்
காவிய மாந்தர்கள் அல்ல!

அந்தத் தசரனுக்குத்
கட்டாயம் இருந்தது
கைகேயியின் வரம்
அவனைக் கட்டிப்போட்டது

நாங்கள் சுதந்திரமானவர்கள்
காற்றைப் போலவே
எங்கள் இராமர்களை
எந்தப் பள்ளிக்கும்
அனுப்புவோம்

கட்டாய வலைகளால்
எங்களை யாரும்
கட்டிப் போட முடியாது!"

இடைவெளி விட்டு
கூட்டத்தை நோக்கினார்
கைத்தட்டிக்களிக்கும் கூட்டம்
மீண்டும் ஆரவாரித்தது

படிப்பகம்

www.padippakam.com

காட்சி 5

எந்த இடம் தெரியவில்லை
எங்கும் புகைப்படலம்
கண்களைக் கசக்கி
கவனித்தேன்

என் முன்னே யாரது?
செதுக்கிய மீசையோடு
சீறும் பார்வையோடு
கோபம் கொப்பளிக்க
நிற்பது யார்?
பாரதிதாசனா?

சந்தேகமேயில்லை!
நாயினும் கீழாய்ச்
செந்தமிழர் நலிவதைக்கண்டு
பொங்கியெழுந்த
பாவேந்தர்தான்!

அவர் முன்னே
குற்றவாளியாய் நானும்
கூனிக் குறுகி நின்றேன்

"மொழியுணர்வு தழைக்க நான்
மொழிந்ததுதான் எத்தனை?
துளியளவே இங்கிருக்கும்
தமிழுணர்வை நான் அறிந்தேன்
துடித்துப்போகிறேன்.

தமிழியக்கம் கண்டேனே!
மாண்புமிகு மலையகத்தில்
மறத்தமிழர் யாவரும்
மறந்தா போனார்?
கூறுமடா கூறு!"

பாவேந்தர் கொதித்தார்
பதறிப்போனேன் நான்

பாவேந்தரே!
பாட்டுக்கு வேந்தரே
புயலெனப் புறப்பட்ட
புதுச்சேரித் தென்றலே!

மலையளவு தமிழுணர்வு
மலையகத்தில் இல்லை
துளித்துளியாய் தமிழுணர்வு
இங்கிருப்ப துண்மை!

மொழிக்காக இனத்திற்காக
உழைக்கின்ற ஒரு சாரார்
தமிழ்ப்பள்ளி தரமுயர
தவிக்கின்ற ஒரு சாரார்
ஈழத்தமிழனுக்கு இன்னலெனில்
துடிக்கின்ற ஒரு சாரார்
எழுத்தையே மருந்தாக்கி
இளைக்கின்ற ஒரு சாரார்
தமிழ்ப்பண்பில் சிதைவென்றால்
சீறுகின்ற ஒரு சாரார்
தமிழ்க்கலைகள் நிலைப்பதற்கு
கைகொடுக்கும் ஒரு சாரார்

இப்படி -
துளித்துளியாய் தமிழுணர்வு
இங்கிருப்ப துண்மை
தமிழியக்கம் இல்லாமல்
தவிப்பதுவும் உண்மை

தமிழுக்காக ஒரு மையம்
நாளை காண்போம்!
தமிழரோடு இனமுயர
உறுதி கொண்டோம்!

தெளிவாக என்கருத்தை
எடுத்து வைத்தேன்
புன்னகை அவரிதழில்
தவழக் கண்டேன்

புகைப்படலம் இன்னும்
அடர்த்தியானது
பாவேந்தர் திடீரென
மறைந்து போனார்

(திரை)

மலைநாட்டில் தமிழுணர்வை
நிறுத்துப் பார்த்து
காட்சிகளாக இங்கே
கடைவிரித்தேன்

அவையோரே நீங்கள்
கொள்வீர்கள் என்ற
குறிப்புணர்ந்தேன்

கனத்த இதயத்தோடு
இங்கே
கவிபாட வந்தேன்
அழுத்தமான சிந்தனையைப்
பந்திவைத்த பரவசத்தில்
விடைபெறுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# உலக விளிம்பில் தமிழன்

சீ. அருணாசலம்
பகாவ்

என் அன்பிற்குரியவர்களே !
சற்று மௌனமாய் இருங்கள்
இங்கே ஒரு தமிழன்
பேசிக் கொண்டிருக்கின்றான் !

நண்பா !
வேங்கையைக் கண்டு
வேடிக்கைப் பார்த்தவர்களா நாம்...
வீரத்திற்கென்றே
விளையாட்டு வைத்தவர்கள் !
புலியின் பல்லில்
புதுமணம் புரிந்தவர்கள் !

போருக்கென்றே
புறநானூறு பாடியவன் தமிழன் !
மஞ்சு விரட்டும்...
புலி நகமும்...
நமக்குப் புதுமையல்ல
அவை நம் வரலாற்றைப் போல்
நீளமானது !
எங்களூர்
பாட்டியின் காதுகளைவிடவோ
உங்கள் வீரம் நீளமானது !
நாங்கள்
* சிலம்புக்களையே கிண்ணத்தில்
போட்டு இடித்தவர்கள் !

*பாட்டிமார்கள் வெற்றிலை இடிக்கும் நிகழ்வு!
சிவப்பு நிறம் புரட்சியின் எழுச்சியாக கருதப்படுகின்றது

என் இனிய நண்பர்களே !
சில்லறைக்காக
சிரிப்பை விற்கும் உலகில்
புன்னகைக்காக
புதுப்பாட்டுப் பாடியவன் தமிழன் !
நமக்கு ஒரு பழிச்சொல் உண்டு...
நாம் பகலுக்காக
இரவைத் தொலைத்தவர்களாம் !
அவர்களுக்குத் தெரியாது
நாம் இரவுக்காக...
பகலில் கவிதை எழுதியது !

நாங்கள்
வரலாற்றுச் சுவடுகளுக்கு
வண்ணம் தீட்டியவர்கள் !
எறும்பிற்கும்...
"எழு" என்பதைக் கற்றுக் கொடுத்தோம் !

திரைகடல் ஓடியும்
திரவியம் தேடென்று
பொருளாதாரச் சிந்தனைக்குப்
பொட்டிட்டோம் !
முத்துக் குளிப்பதற்கு
முத்தமிட்டோம் !
எங்களை ஏமாற்றியது
எவரென்று தெரியாமலேயே
ஏமாளானோம் !

ஒன்று சொல்லட்டுமா ?
நாங்கள்
மிக மிக அன்பானவர்கள்
நட்பிற்காக நாட்டையே கொடுத்தது
இந்தத் தமிழனைத் தவிர வேறு யாருண்டு !
பண்பாட்டு உச்சத்தில்
பல்லாங்குழி ஆடினோம் !
மாட்டுக்கும் நாங்கள் மாண்பு கொடுத்தோம்
பொங்கல் எங்களது
பக்குவத்தின் பறைசாற்றல்லவா ?

கத்தியும் கருவிகளும்
அஃறிணையேயன்றி
உயர்திணையல்ல என்றவர்கள் நாம்!

நண்பனே!
சில்லறைகளால்....
எங்களைச் சிறையிட முடியாது!
முரசுகள் இன்னும் ஒலிக்கவில்லை
கடல் அலைகளின் அறைகூவலுக்கு
மதிப்புரை எழுதினோம்!

என் அருமைத் தமிழனே!
நாம் வரலாற்றைத் தொலைத்தவர்கள்
மூன்று தலைமுறை தாண்டிய
முப்பாட்டன் பெயர் தெரியவில்லை!

எல்லாரும்
சற்று எழுந்து நில்லுங்கள்!
இந்த நூற்றாண்டைக்

www.padippakam.com

கையில் ஏந்தியவர்கள்
அடுத்த நூற்றாண்டிற்காக
தோள்களைச் செதுக்குபவர்கள்
வருகிறார்கள்!!!


நண்பர்களே!
எல்லாரும் வாருங்கள்
அடுத்த நூற்றாண்டிற்கான
காற்றை...
* இதயம் என்னும்
இறைச்சித் துண்டிற்குள் சேகரிப்போம்!!!

(* சிராச் என்னும் உருதுக் கவிஞனின் வரி

படிப்பகம்

www.padippakam.com

## கல்லறை வாசகங்கள்



பூபாளப் பொழுதில்
கனவு ரதங்களில்
கோனைப் பிடித்துக் கொண்டு
என்
அன்பே
நீ
போவது எங்கே ?

சூத்திரதாரிகளின்
சாத்திரப் பேச்சுகள்
வானத்தைப் பதியம் போடும்
கடலிலும் கோழி மேய்க்கும்
மறந்துப்போய்
வானவில்லை கைவிட்டவனே
உன்னால்
என்
நம்பிக்கைப் பதியங்களை
தொலைய விட்டிருக்கிறேன் !

நசிந்து விட்ட
நந்தவனங்களில்
நாளைய நம்பிக்கை முனைகள்
கண்ணிலிருந்து மறையும்
வாழ்க்கையின்
வைகறைப் பொழுதில்
என்
அன்பே
நீ
போவது எங்கே ?

அடியே !
இந்த அரச விதையினுள்
நம் கதையினை
எப்படி மறைக்கப் போகிறாய்
எத்தனை முறை
மறைக்கப் போகிறாய் ?



கு. வேலுசாமி
பகாவ்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# ஆயுதங்களே !!!

குட்டித் தீவின்
வடகிழக்குப் பொத்தலில்
ஓர்
அசரீரி ஒலி ...

யாரது ?
நாமெல்லாம்
சோறு தின்னும் சென்மம்தானே ...

சாப்பிட வாருங்கள்
அள்ளி அள்ளித் தின்னுங்கள்

கைகளைத்
தூய்மையாய்க் கழுவி
தின்னுங்கள் !
தின்னும்போது
இறக்கி வைத்தீர்களே ...
அதைத் தூங்க வைத்தீர்களே ...

அதை மட்டும்
நிரந்திரமாக்குங்கள் !

இப்படிக்கு
பசியோடு
ஒரு தாய் ...

ஏ. தேவராசன்
சாசின்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

## மீண்டும் முளைப்போம் !

வாருங்கள் தோழர்களே !
நாம் மீண்டும் முளைப்போம்
மரங்களாய் அல்ல
மனிதர்களாய்...

நெருப்புக்கு சூட்டை
சொல்லிக் கொடுப்போம் !
காற்றுக்கு குளிர்ச்சியைக்
கற்றுக் கொடுப்போம் !
ஒவ்வொரு மனிதரும்
ஆயிரம் விதைகளாய்
உருவெடுப்போம் !

நெருப்பைச் சுமந்த கைகள்
இன்று
குளிருக்கு நடுங்குவதேன் !

சுமைகளே சுகமானதால்
சுகங்களே சுற்றமானதோ !
வேடிக்கைதான்
ஒவ்வொருவர் கையிலும்
ஒரு கத்தி !

மதிப்பிற்குரியவர்களே !
எழுந்து வாருங்கள்
நாம் அடைய வேண்டியதை
இன்னும்
அடையவேயில்லை !

படிப்பகம்

www.padippakam.com

மீண்டும்
முளைப்போம் !

நம்மை சாக்கடையில் படர்ந்த
சல்லி வேர்கள்
என்றவர் மீது மறியல் செய்வோம்
நாம்
ஆழமாகப் பதிந்த
ஆணிவேர்களென்போம் !

வரலாற்றுக்கு வணக்கம்
சொல்லிவிட்டு
சுவடுகளுக்கு சமாதி கட்டுபவர்களே !
உங்கள் சிந்தனையைச்
சலவை செய்யுங்கள் !
வாருங்கள் தோழர்களே !
தீவட்டியால் ஒளியேற்றி
இரவைப் பகலாக்குவோம்

நம்மிடம் என்ன இல்லை ?
சற்று நேர ஓய்வில்
சயனம் கொண்டோம் !
மீண்டும் முளைப்போம்
தொலைந்துப்போன
சுவடுகளை தேடியெடுப்போம்
ஒவ்வொரு இளைஞனும்
ஒவ்வொரு சூரியனாய் பிறப்போம் !
உலக எல்லைகளில்
நெருப்பூட்டி ஒளியேற்றுவோம் !

காற்றில்
ஏன் இத்தனை கொலையாளிகள்
எங்கே போயினர்
மனிதாபிமானிகள் !

படிப்பகம்

www.padippakam.com

எங்கள்
தேச வரைபடத்தில்
கீறலிட்டது யார்?
பொல்லாத வம்பர்கள் மீது
வழக்குத் தொடுப்போம்
நம் வரலாற்றை
நம்மிடமே கொடுத்துவிட!

மீண்டும்
முளைப்போம்!

காற்றைக் கிள்ளி
களவாட முடியுமா?
சுதந்திரத்தை சூறையாடி
சிறைபடுத்த முடியுமா?

தோழனே!
நீ சும்மாயிருந்தால்
சுகமொன்றுமில்லையே...
விடியல் என்பது
விழிப்பதற்கே!
ஒரு செய்தி சொல்லட்டுமா...
நாம்தான் இன்னும்
தூங்கவேயில்லையே!!!

சீ. அருண்

படிப்பகம்

www.padippakam.com

# ஏதிலி...

அகதி ... அகதி ... அகதி
புத்தினம் ஒன்று புறப்படும்

விரும்பியா ...
வீதிக்கு வந்தோம்

அழையா பெயரில்
அடையாளச் சின்னம்

எவர் பெயரைச் சொல்லி
யாரிடம் அழ ...

கேள்விகளே பதிலாய்
பதில்களே கேள்வியாய் ...

ஓ ! ஏதிலி வாழ்வில்
எல்லாமும் உண்டு
சுதந்திரத்தைத் தவிர ...

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்

படிப்பகம்

www.padippakam.com

# விதி

ஊடலும் கூடலும்
உடைந்த வில்லாய்
கரைந்துப்போன நினைவுகளோடு
கவியெழுத வந்துள்ளேன்!

அடி! பெண்ணே
எதற்காக
பிரிவு
ஏக்கம்
ஏமாற்றம்
வா!
ஆசைகளை அறுக்குவோம்
வாழ்க்கையை
வடித்தெடுப்போம்.

எல்லைகளைக் கடந்தால்
எல்லாம்
வெறுமைதான்
சொற்களில்கூட
சில்லறைகள் பலவுண்டாம்

அடியே!
சல்லி வேர் நுனிகளில்
ஒட்டிக்கொண்டிருக்கும்
நீர்
இதயப் பொத்தலின்
சிவப்புக் காதல்களா?

பா. மயில்
பகாவ்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# பசியுடன் சில வினாக்கள்



பசியுடன் படுத்துக் கொள்வோம்
என அழு குரலிடும் அன்பானவளே

கரையான்கள் அரித்து சேதப்படுத்திய
பழைய புல்லாங்குழலின் சுரம் பாடுமோ
நம் துயரம்—

துஷ்டி வீட்டின் பெண்களுக்கு
வயிறுகள் கூட தேம்பியழும்...
அந்தப் பசியை—
எந்தப் பசியில் சேர்த்துக்கொள்ள.

அன்றை அன்றைக்கான உணவை
தருவதாய் வேண்டுதலின்
கடைசிக் குரலும்
ஈன ஸ்தாயில்
உதிர்ந்தாயிற்று.

'கனவான்களே'....
காதில் விழலியோ
எங்கள் முறையீடும்—

ஆனாலும்
வயிறுகள் அற்று
பிறந்த குழந்தைக்கு
பசியைப் போதிக்க—
எங்களுக்கும் தெரியவில்லை

பால் வற்றிப்போன
மார்பகங்களில்
கண்ணீர் வடியும்
காலத்துக்கு என்ன பெயரிட?



ஆசு

படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொருவரிலும்
ஒருவர் கலப்பது அரிதாயிற்று

வெறுமனே கூடி
மகிழ்ந்து
துக்கித்து
பிரிந்து செல்கையில்
நாவுகள் உச்சரிக்கின்றன
'நடிப்பின்
வாழ்க்கை
அதிசயம் எல்லாமும்' என

கடலினுள்
நதி கலக்கும்
சூட்சுமம்தான்
மனிதர் அறிவரோ.

ஒவ்வொருவரிலும்
சோர்வு அலைக்கழித்து
எங்கோ
ஓர் மூலையில்
'தான்' என ஒதுங்கையில்

நிழலாய்க் கரைந்து
இளைப்பாற....
சூரியன் புன்னகைக்கும்.

புணர்ச்சி இயக்கமாய்
கூடிக் கலந்து
கலந்துப் பிரிந்து
ஒன்றும் இல்லாததாய் ஆகி

ஒன்றில்
இன்னொன்று உருக்கொள்ள
நம் ஜீவன்களின் துடிப்பில்
விதிகளின் காய்கள் நகர்த்தி
நகர்ந்தோம்

நீங்களும்
நாங்களும்
நாம்களாய் விரிந்தும்

எல்லையற்றதோர் பிருமாண்டம்
ஒவ்வொருவரிலும் சுருங்க....
சூன்ய மையத்துள் இறுகினோம்

கருவறையின்
நம் அழுகை
உருண்டுத் திரண்டு
யுகங்களின் பந்தாய்
சுருட்டி எறிந்தோம்

எப்படிக் கலந்தோம்
எப்படிப் பிரிந்தோம்
என அறியாது.

## உள்ளும் வெளியும்

படிப்பகம்

www.padippakam.com




மலேசியாவில் கவிதை இலக்கியம் வளர்ச்சி பெறவில்லை என்று நமது முதிய கவிஞர்கள் கூடப் பரவலாகப் பேசி வருகின்றனர். கவிதைத் துறையை வளம்பெற வைக்க வேண்டியவர்களே, கவிதை வளர்ச்சியடையவில்லையே என்று அங்கலாய்த்துக் கொள்ளுவது சிலருக்குப் பொழுதுபோக்கு.

சிலர் கவிதைக்கு யாப்பு தேவையில்லை, ஆற்றொழுக்கான நடையும், சொல் நயமும், பொருள் நயமும் உவமை அலங்காரச் சிறப்பும் அமைந்தாலே சிறந்த கவிதையாகி விடுகிறது என்கின்றார்கள்.

ஒரு குழந்தையைப் பார்ப்பவர்கள் அள்ளி அணைத்து முத்தமிட்டு மகிழும் அளவிற்கு அழகாகவும், இலட்சணமாகவும் பிறக்கின்றது. அஃது இரு கால்களும் இல்லாத முடமாக இருப்பின் எவ்வளவு அழகாக இருப்பினும் அதை முடமாகத்தான் கருதுவார்கள்; அழைப்பார்கள்.

அதுபோல எவ்வளவு சிறந்த கவிதையாக எழுதினாலும் யாப்பிலக்கணப் பிழையோடு எழுதும் கவிதைகளையும் ஊனமுற்றதாகத்தான் கருதப்படும்.

"மலேசியத் தமிழ்க் கவிதை நூல்களில் யாப்பமைதி ஒரு கண்ணோட்டம்" என்னும் இந்நூலில் மொத்தம் பத்துக் கவிதை நூல்களை ஆய்வு செய்து இதில் உள்ள இலக்கணப் பிழைகளை சுட்டிக் காட்டியுள்ளேன். இச்சுட்டுதல் நிச்சயமாக எதிர்காலப் படைப்பிலக்கியச் சிற்பிகட்குப் பயன்படும் என்று நினைக்கின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com

மனிதனின் வாழ்வியலில் இன்பம் - துன்பம், குறை - நிறை என்ற இருவேறுபட்ட நிலைகள் உள்ளன.

வாழும் மாந்தன் இதனை வாழ்க்கை நெறி, இயற்கை கொள்கை என ஏற்றுக் கொள்கிறான்.

எந்தவொரு நிலைக்கும் விருப்பு வெறுப்பு என்ற உணர்வின் உந்துதலே வாழ்வாக அமைந்திருக்கின்றன.

சராசரி வாழ்வில் இருவேறு நிலையை ஏற்றுக் கொண்ட மனிதர்கள், இலக்கியவாதிகள், படைப்பாளிகள் - தங்கள் படைப்புகளில் மட்டும் குறை காண ஒப்புக் கொள்வதில்லை, தாங்கள் ஆக்குவதே படைப்பு என்ற பேருணர்ச்சியால் இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மொழியின் முதல் உருவமாய்த் திகழ்வது கவிதைப் படைப்பாகும். பன்னெடுங்காலமாய் இத்துறையே தாய்த் - துறையாக விளங்கி வந்துள்ளது. ஈடுபட வேண்டும் என்ற ஈர்ப்புச் சிந்தனையாலேயே நம் நாட்டுக் கவிஞர்கள் இத்துறையில் நுழைந்து பெறும் புகழ் ஈட்டியுள்ளனர்.

பெறும்பாலோர் பாட்டெழுதுவதே நோக்கமாகக் கொண்டிருப்பலால் கவிதையின் இலக்கண மரபுகளை மறந்துவிடுகின்றனர். தங்களது படைப்பில் காணப்படும் இலக்கண பிழைகளை ஏற்காது- எந்நிலையிலும் தங்களது படைப்பே உயர்ந்தது என்று இறுமாப்புக் கொள்கின்றனர்.

கவிஞர்களின் இவ்வகை மனநிலை மாறவேண்டும். ஒரு படைப்பிற்கு அகமும் புறமும் முகாமையானது. கருத்தை மட்டுமே கருத்தில் கொண்டு எழுதுவது சிறப்புதான். இருப்பினும் அக்கருத்து எவ்வகை படைப்பில் ஏறிவருகிறதோ அந்தப் படைப்பின் அகநிலை சிதைவுராமல் காப்பது படைப்பாளர் பொறுப்பல்லவா?

பொதுவாக மரபுக்கவிஞர்கள் இலக்கண மரபுகளை பெரிதுபடுத்தாமல் எழுதுவது இயல்பாகிவிட்டது. இது ஒருவகையான இலக்கண - இலக்கியச் சிந்தவாகும். இதனால் பின்வரும் சந்ததியினரின் இலக்கண - இலக்கிய அறிவும் உணர்வும் கெடும்.

படிப்பகம்

டாக்டர் டி.வி.ஆர்.பி. அவர்கள் யாப்பிலக்கணக் கண்ணோட்ட நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். இதன் படைப்பாளர் தங்களின் படைப்பின் கருத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.

www.padippakam.com

இந்நூலில் பரவிக்கிடக்கும் சிந்தனைகள் சிலவற்றைத் தொடுத்துள்ளோம்.

ஒரு கவிஞன் யாருக்கும் தலைவணங்காத மாண்பு உள்ளவனாக இருக்க வேண்டுமே தவிர தலைக்கனம் உள்ளவனாக இருக்கக் கூடாது என்றுணர்ந்து ஒவ்வொரு படைப்பாளனும் தம் படைப்பைப்ப தொடங்க வேண்டும். (பக்கம் - 17)

மலேசியாவில் மட்டுமின்றித் தமிழ் நாட்டிலும்கூட ஒரு நூலுக்கு அணிந்துரையோ, மதிப்புரையோ, சிறப்புரையோ எழுதுகின்ற புலவர்களும் அறிஞர்களும் பெருந்தன்மையுடன் நூலாசிரியரைப் பாராட்டியே எழுதிவருகின்றனர். இத்தகைய நூல்கள் ஒரு திறனாய்வாளனின் பார்வையில் படும்போதுதான் இந்நூலாசிரியரின் எதிர்காலம் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்று உணர முடிகின்றது. (பக்கம் - 28)

ஒரு மொழிக்கு இரு கண்கள் இருக்கின்றன. ஒன்று மொழியிலக்கணம் மற்றொன்று யாப்பிலக்கணம். எனவே ஒரு கவிஞனுக்கு மொழியிலக்கணப் புலமை இருப்பது போல் யாப்பிலக்கணப் புலமையும் இருக்க வேண்டும். (பக்கம் - 48)

ஒரு மனிதன் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் எவ்வித அழுக்காறுமின்றிப் புனிதனாயிருந்து இறை நம்பிக்கையுடன், உளத்தூய்மையுடன் எவ்விதப் பிழையுமின்றிச் செய்யுள் இயற்றுமாயின் நிச்சயமாக அப்பாடல் உயிர் பெற்று நடந்துவரும், அறம் பாடும் ஆற்றலும் கைகூடும். (பக்கம் - 57)

இந்நூலைக் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புக் கொண்டு பெறலாம்.

நூலின் விலை ம.ரி. 10.00

பாவலர் டாக்டர் டி... வி. ஆர். பி அவர்கள்
NO. 33, JALAN SJ - 21
TAMAN SELAYANG JAYA
68100 KUALA LUMPUR
SELANGOR
MALAYSIA

படிப்பகம்

www.padippakam.com

## சிலுவையில் அறையப்பட்ட அகதிகள்



அன்று
வளநாடும்
மலைகளையும்
பரிசில் பெற்ற
பாணன் பூமி !

புறநானூற்றையும்
புறம் காட்டிய
புலிக்கொடி
பறந்த பூமி !

இன்று
சிலுவையில் அறையப்பட்ட
இயேசுக்களாய்
ஈழத்து அகதிகள் !



இருண்ட கண்டத்திலும்
கருப்புச் சூரியன்
ஒளிவிளக்காயிற்று !

ஈழத்து பூமியில்
உதிரச் சேறு
உறைந்துக் கிடக்கிறது !

படிப்பகம்


www.padippakam.com

அன்று
பாழ்நிலத்தில் பயிர் வளர்த்த
யாழ்ப்பாணத்தான்
இன்று
பைன் மரக்காடுகளில்
வயிறு வளர்க்கும்
அவலம் ஏன் ?

மார்கழிக் கடுங்குளிர்
மகனுக்கு ஆகாதென்று
முந்தானையில் முகம் போர்த்தி
தேத்தண்ணி
கொடுத்த அம்மா
சொந்த நாட்டில
அகதியாய் ...

மகனோ !
அந்நிய நாட்டின்
பனி உறையும்
தெருக்களைக் கூட்டிக் கொண்டு ...

விடுதலை
தேவை
ஆன்மாவுக்கன்று
தேகத்திற்குமன்று
எங்கள்
தேசத்திற்கு !!!




படிப்பகம்

www.padippakam.com

# தமிழன் நிறம் !

வணக்கங்களுக்குப் பதில்
கைக்கூப்பும்
'சைனட்'டுகள்

முகம் திருத்தும்
முயற்சியில்
தம் தலையே
பலிபீடத்திற்குப்போன கதை!

இங்குக்கூட
சில தேசத்து எருமைகள்
சேற்றிடம் பகைத்துக் கொள்ள ...

பந்தம் வளர்க்காத
ஒப்பந்தங்கள் ...
அவற்றில்
ஓட்டை மேல் ஓட்டை
ஓட்டுப் போட்டு
ஒட்டுப் பொட்டு
அரசியல் பெருச்சாளிகள் ...

ஒவ்வொரு மலர்ச்சியும்
அழுதவாறு !

தமிழா !
நீயென்ன கடல்மீது
ஓடமா !

அது ...
காலாகாலப் பயணமா ?

முதலாவதாய்
ஓடி வந்த உன்னை உலகம்
மெச்சும் விதத்தைப் பார்த்தாயா ...
அழுதல் பரிசைத் தந்தவாறு !

ஏ. தேவராசன்
சாசின்
மலேசியா.

படிப்பகம்

# செய்வீரா ஒரு கருவி ???

கண்டமதை கணப்பொழுதில்
போய் அழிக்கும்
ஏவுகணை செய்வோரே !

அண்டமதைப் பிளந்து
அதிர வைக்கும்
அணுக்குண்டு செய்வோரே !

இறந்த மனிதனை
இறவா மனிதனாக்கி ...
நடக்க... நடிக்க... சிரிக்க வைக்கும்
உலகப் பெரும் நாடுகளே ...
பெரும் மனிதர்களே !

மனித உள்ளமதைச் செய்யும்
ஒரு கருவி செய்வீரா ?

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்.

www.padippakam.com

வாழ்க்கை

தேனி
தேன் சேர்க்கவா
சிலந்தி
வலை பின்னியது !

வேலைக்காரி

எங்கள் வீட்டு
தினமுரசு

துடைப்பம்

தேய்ந்துப்போன
மனிதக் கூடு !

வெ. தேவராசலு
பினாங்கு
மலேசியா

படிப்பகம்

www.padippakam.com

# நான்தான் பேசுகிறேன்

நிலாக்கால மேகங்கள்
உன்னையும் என்னையும்
நனைக்கும்
சேர்த்தே

வித்துகள் இன்றியே
விளையும் மரங்கள்
உன் கண்களில் மட்டும்தான்

அடி தோழி
காதலின் அழுத்தம்
காவியத்தில்
என்பது பொய்
அது உன் காது மடல்களில்
என்பதே மெய் !

அடியே !
ஆற்றுச் சுழற்சியிலும்
மீண்டிருப்பேன் ...
உன் உதட்டுச் சுழற்சியில்தான்
காணாமல் போய்விட்டேன் !

www.padippakam.com

இன்றுபோல என்றும்
கனவுக் கரங்களில்
நான்
நீ இல்லாமலேயே ...

கடிவாளம் இன்றி
கடலுக்கடியில் செல்லும்
ஒரே குதிரை
கற்பனை மட்டும்தான் ...

மனசு அலைகள்
காலம் காலமாய்
மறைந்திருக்குமா என்ன ...?

அடியே ! எல்லாமும் உண்டு
கனவுகளில் மட்டும் ...

கு. வேலுசாமி
பகாவ்
மலேசியா,

www.padippakam.com

## ஆட்டம்!

கூட்டம் கூடி கலைத்திலே
களைப்பும் சலிப்பும் வந்தாச்சு
நாட்டம் தலைவர் பதவியிலே
நாளும் கூடி கலையாச்சு

வாட்டம் வருத்தம் மனதினிலே
வயதும் ஓடிப் போயாச்சு
வாட்ட சாட்ட உடம்புந்தான்
வளைந்து கூனிப் போயாச்சு


ஆட்டம் எல்லாம் ஆடியதால்
அலுத்து அடங்கிப் போயாச்சு
ஓட்டம் வேகம் எல்லாமே
ஓய்ந்து ஒடுங்கிப் போயாச்சு

காட்டம் பேச்சும் ஏச்செல்லாம்
கதிக லங்கிப் போயாச்சு
கூட்டம் கூடி ஒருநாளில்
கூட்டை எரிக்கும் இழிவாச்சு!

கண்மணி
பந்திங்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com



மடி மீது தலைசாய்த்து
கவிமொழி புலம்பல் ...

மௌன ஓலங்கள்
சுதியேறி
மருண்டு
துள்ளிக் குதித்து
கரை புரண்டோடி
எண்ணை உமிழ்தலில்
துள்ளிக் குதிக்கும் பூமி

ஆற்றோர நிலத்தில்
முகாமிட்டு உறுமும் வேங்கை
இலைகளின் சலசலப்பில்
மீள்பார்வையிடும் கண்கள்

அவள் மெல்ல வருவாள்
கவின்துயாய் ...
மாலையாய் ...
பகலாய் ...


இங்கே
நான் ...
என் கைகளை
கழுத்றியபடி ...

ப.மயில்
பகாவ்
மலேசியா.

படிப்பகம்

www.padippakam.com

# காசி ஆனந்தனின் நறுக்குகள்



## கொலு

தங்க வாளும்
வெள்ளி வாளுமே
மேடைகளில் தரப்படுவதால்
நாங்கள்
போராடுவதில்லை

## மீறல்

பூனை கழுத்தில்
மணி கட்டுவது
யார்?


ஏன்? ஓடி ஒளியவா?
சொன்ன கோழை
எவன்?


நூறு எலிகளாய்
பூனையின் கழுத்தை
கடித்துக் குதறுவோம்



## உடைப்பு

கிளியின் கூண்டை
திறந்து விடு
சொல்கிறார்கள்...
முரண்படுகிறேன்
உடைத்து விடு.





## கொடை

தங்க வளையலை
கழற்றி
போராளியிடம்
தந்தாள்


செலவுக்கு
வைத்துக் கொள்

உங்களில் பலருக்கு
கைகளே இல்லை

எனக்கு எதற்கு
வளையல்?

## வியர்வை

கோடரி கொண்டு
அவன் வெட்டியது
விறகை
பிளந்தது
அவனை



படிப்பகம்

www.padippakam.com

# RESTORAN INDRAVINDRA

உரிமையாளர் : சு.ரவிச்சந்திரன்

No. 154-M KG. JAWA BATU 8,
JALAN BUKIT KEMUNING
42450 KLANG

புக்கிட் கமுனிங் வட்டாரத்தில் புகழ் பெற்ற உணவகம் எங்கள் உணவகம். எங்களின் சைவ / அசைவ உணவு வகைகளை உண்டு களிக்க அன்போடும் பன்போடும் கனிவோடும் அழைக்கின்றோம்; வருகை அளியுங்கள்!

உங்களின் வருகையே எங்களின் உவகை!

சுவையான உணவிற்கும்
இனிய பானத்திற்கும்
நீங்கள்
நாட வேண்டிய
உணவகம்

சாமினி உணவகம்
ரொம்பின்
நெகிரி செம்பிலான்
மலேசியா

படிப்பகம்

www.padippakam.com

# உன் கவிதைகள்...

தென்றலாய் வீசட்டும்
    தீமையைக் கண்டிடின்
தீவிரப் புயலாய் மாறட்டும்
    திங்களாய்க் குளிரட்டும்
சதிக்கார மடமைகளைச்
    சந்தித்தால் சூரிய னாகட்டும்

கண்மணியாம் காக்கட்டும்
    கடமையை இகழ்வார்முன்
காட்டுதீ யாய்ப்பற்றி எரியட்டும்
    பண்புக்குப் பணியட்டும்
பண்பாட்டை சிதைப்பார்முன்
    பாவேந்தன் கவிதைக ளாகட்டும்

ஆரவாரம் வெறுக்கட்டும்
    அமைதியைக் குலைப்பார்முன்
ஆத்திர அலைகளாய்ப் பாயட்டும்
    போராட்டம் விடட்டும்
பொல்லாங்குப் புரிவார்முன்
    போராட்டக் களமாக விளங்கட்டும்

பதறாதொண் டெடுக்கட்டும்
    பகுத்தறிவில் திரைபோடும்
பாழும் கரத்தை வெட்டட்டும்
    எதையும் தாங்கட்டும்
இனத்திற் கிழிவென்றால்
    ஈழத்து வெடியாய் வெடிக்கட்டும்

சகல வித்தையும்
    தானடக்க மாகுமோ
தன்மானத் தமிழ்க் கவிதைத் தாய்க்குள்ளே
    அகத்தி விதையளந்து
எழுத்தாய்க் கைக்கொண்டால்
    ஆகாத செயலு மிங்கில்லை

ம. அ. சந்திரன்
தாசெக் குருகோர்
மலேசியா.

படிப்பகம்